ஞாலகுருவின் படைப்புக்கள்

# அருளுலகமே தடுமாறும் உகப்போர்



இந்துமதம் ஒரு மதமல்ல; அது இந்தியப் பண்பாட்டின் நிலைக்கலனாகும். இந்துமதம் என்ற ஓர் அமைப்பை, இயக்கத்தை, தத்துவக் கோட்பாட்டை இந்திய மக்களின் அன்றாட நடைமுறை வாழ்விலிருந்து தனித்துப் பிரிக்கவே முடியாது.

இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 தை மாதம்.
**இந்து இலக்கியக் கழக வெளியீடு**
காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **"அருளாட்சிப் போர்த் துவக்க அறிவிப்பு"** - அருட்போர் கி.பி.1992இல் துவங்க இருந்தது, அதற்கு முன்பே 1988இலேயே துவங்கி விட்டது என்பதை அறிவித்த மடல்.
2. **"அருளுலகமே தடுமாறும் உகப்போர்"** - அருட்போருக்கான வரலாற்றுப் பின்னணியை குருதேவர் விவரித்த மடல்.
3. **"அருட்போரில் பயன்படுத்த வேண்டிய மந்திறம்"** - துணிச்சல் உள்ள அனைத்து அடியான், அடியாள், அடியார்களும் அருட்போரில் பயன்படுத்த வேண்டிய பூசைமொழியினையும், முறையையும் குருதேவர் வழங்கியுள்ள மடல்.
4. **"பயிற்சிப் பள்ளியில் வழங்கிய வணக்கவுரை"** - பதினெண்சித்தர் மடம் நடத்தும் பயிற்சிப் பள்ளி நிகழ்ச்சிகளின் போது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமைப் பொறுப்பாளர் வழங்கிய வணக்கவுரை.
5. **"இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளவளர்ச்சிக்காக இந்துமதம் பற்றிய பேருண்மைகளில் சில"** - குருதேவரின் தந்தையார் சித்தர் காகபுசுண்டர் திரு ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் எழுதிய முன்னுரை.
6. **"அடியானுக்கு குருதேவர் வழங்கிய விளக்கங்கள்"** - கடந்தப்பட்டிச் சித்தரடியான் ஒருவர் மூலம் அனைத்து அடியான்களுக்கும் குருதேவர் வழங்கிய கருத்துக்கள் அடங்கிய அஞ்சல்.
7. **"மீண்டும் அருளுலக அறிமுகம்"** - குருதேவருடன் சிலகாலம் தொடர்பு இல்லாமல் போய்விட்ட விரகாலூர் சிவனடியார் ஒருவருக்கு மீண்டும் அருட்பட்டங்கள் வழங்கிக் குருதேவர் எழுதிய பதில் அஞ்சல் மடல்.
8. **"ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக் கவிதை"** - குருதேவர் எழுதிய ஆங்கிலப் புத்தாண்டிற்கான வாழ்த்துக் கவிதையினை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வதற்காக இறுதிப் பக்கத்தில் வழங்கப்படுகின்றது.

சென்னை-11,
தலைமைப்பீடம்.

# <u>அருளாட்சிப் போர்த் துவக்க அறிவிப்பு</u>

1) கி.பி.1992இல் துவங்க இருக்கும் அருளாட்சிப் போருக்கு முன்பாகவே, அருளுலகப் போர் 12-2-1988 (பிறவாக ஆண்டு தை மாதம் 29ஆம் நாள்) வெள்ளிக்கிழமை முதல் துவங்கி விட்டது. இப்போரில் நமது சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் அனைவரும் முழு மனதுடனும், முழு விருப்பத்துடனும், ஈடுபாட்டுடனும் கலந்து கொள்ள வேண்டும் என்று குருவாணை இடப்படுகிறது. ஏற்கனவே அறிவித்துள்ளபடி இப்போருக்குத் திருத்தணி முருகன் தனது துணைவியர் இருவரோடு மயில் மீதமர்ந்து தலைமையேற்கிறார். அருட்படைத் தலைமைக்குத் தளபதியாக பாரத காலத்து துரோணாச்சாரியார் பொறுப்பேற்கிறார். இப்போர் 1992 வரை நீடிக்கும் என அறிவிக்கப்படுகிறது.

எனவே, நம்மவர்கள் அனைவரும் விழிப்புடனும், சுறுசுறுப்புடனும் நாள்தோறும் பகல் 11-1½யிலும், இரவு 11-1½யிலும் தவறாமல் அருட்போரில் தாமும் பங்கு பெறுவதாக அறிவித்துப் பூசைகளைச் செய்து வர வேண்டும்.

2) இவ்வறிவிப்பினைக் காண்பது முதற்கொண்டு இயக்கத் திருக்கூட்டத்தாரில் யாருக்கேனும் உடலில் காயமோ, இரத்தம் சிந்துதலோ அல்லது கடுமையான உடல், மன நலப் பாதிப்போ ஏற்பட்டால் உடனடியாகத் தொலைபேசி மூலமோ, தந்தி மூலமோ குருதேவருக்கு அறிவிக்க வேண்டும். - இது **<u>குருவாணை</u>**.

3) இந்த அருளாட்சிப் போரில் பங்கு பெறப் போகும் அனைவருக்கும் புதிய சன்னிதானப் பட்டங்கள் குருதேவரால் வழங்கப் படுகின்றன. இந்தப் புதிய அருட்பட்டங்களை ஒவ்வொரு முறை பூசை செய்யும்போதும் சிறப்பாகத் தனியாகக் கூறி, தானும் அருளாட்சிப் போரில் முழுமையாகப் பங்கு பெறுவதாக அறிவித்திடல் வேண்டும்.

4) மேற்கண்ட அருளாட்சிப் போர் 16-2-1988 (மாசி மாதம் 4ஆம் நாள் பிறவாக ஆண்டு) செவ்வாய்க்கிழமை காலை (6.45 மணி முதல் 7.15 மணிக்குள்) அடியான்களுக்கு அறிவிக்கப்பட்டது. இராசிபுரம் சுற்றுப்பயணத்தின் போது (12-2-88 முதல் 14-2-88) அடியான் ஒருவருக்கு மந்திரிக்கும் போது கொல்லி மலையில் தவத்தில் ஆழ்ந்து இருக்கும் விசுவாமித்திரரின் ஆதரவாளர்கள் பெருமளவில் குருதேவருக்கு எதிராகப் போரிடத் துவங்கியதால் இந்த அருளுலகப் போர் அறிவிக்கப்பட்டது. இந்த வரலாற்றுப் பின்னணியைத் தெரிந்து நம்மவர்கள் அருட்போரில் பங்கு பெற்றிடுதல் வேண்டும்.

**(ஒப்பம்) ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

**<u>சிறப்புக் குறிப்பு</u>:-** இந்த நகலில் குறிக்கப்பட்டுள்ள, அருட்போரில் பங்கெடுப்பவர்களுக்கான புதிய சன்னிதானப் பட்டங்களின் பட்டியல் அந்தந்த அடியான், அடியாள், அடியார்களுக்கானது என்பதால் இங்கே தரப்படவில்லை.

தலைமைப்பீடம்,
20-3-1988.

# அருளுலகமே தடுமாறும் உகப்போர்

## கலியுகத்தில் வாழும் குருதேவரோடு திரேதகாயுகத்து விசுவாமித்திரர் நிகழ்த்தத் துவங்கியிருக்கும் உகப்போர்

குருதேவரின் பயிற்சிக் காலத்திலோ, முயற்சிக் காலத்திலோ, இல்லறம் ஏற்று கடந்த பதினான்கு ஆண்டுகளிலோ எக்காரணத்தை முன்னிட்டும் திரேதகாயுகத்திலிருந்து நெடிய தொடர் முயற்சிகளால் உகப்போர் ஒன்றுக்கு திட்டமிடப்பட்டிருப்பது தெரியாமலே போய்விட்டது. அதுவும், திரேதகாயுகத்தில் குருதேவருக்கு ஆசானாக, திருமண ஏற்பாட்டின் மூலநாயகனாக விளங்கிய விசுவாமித்திரரே கலி உகத்தில் அருளுலக ஆச்சாறியப் பீடத்தையும், அரசகுரு பீடத்தையும் கைப்பற்றும் திட்டமொன்றைச் செயலாக்க முனைவார் என்று எதிர்பார்க்க வில்லை.

**சிவனே இராமனாகவும், கண்ணனாகவும், பீடாதிபதிகளாகவும் தோன்றும் பேருண்மை**யைப் புரிந்தவர்களுள் ஒருவரான விசுவாமித்திரரே மாபெரும் தவறைச் செய்கிறார். தன்னுடைய தவறுகளுக்கு இம் மண்ணுலகுக்கு முந்திய உலகங்களில் இருந்தே பல்வேறு வகையான தீயசத்தியினர்களை; அசுரர்களிலும், அரக்கர்களிலும் தீயவர்களை; மானுடர்களில் தீயவர்களை, ... தேடித் தேடித் தொகுத்து இணைத்து இம் மண்ணுலக முடிவுக்குள் தம் விருப்பம் போல் அருளுலகுக்கு

மாறுன, விரோதமான ஓர் ஆட்சியை உருவாக்க விரும்புகின்றுர். அதனுடைய உச்சக் கட்டம்தான் சேலம் மாவட்டம் இராசிபுரத்திலும், கடந்தப்பட்டியிலும் விசுவாமித்திரர் தமது வலிமையையும், அருட்போரின் அறிவிப்பையும் வெளிக்காட்டும் போர்த் துவக்க (வம்புக்கிழுக்கும்) நிகழ்ச்சிகள்.

இராசிபுரத்தில் பராசத்தி வடிவான சரசுவதி அம்மாளின் பேத்தியைக் கொல்லும் முயற்சியும், இரண்டாவது மகளுக்குப் பாதிப்பும், கடந்தப்பட்டி பூசாறி அய்யனுர் அவரது மனைவி விசயா ஆக இருவரையும் கொலை செய்யும் முயற்சியும்; பரவலாகக் குருதேவரின் தொண்டர்களில் துரோகிகளையும், விரோதிகளையும், எதிரிகளையும் உருவாக்கும் முயற்சிகளும் நிகழ்ந்திருக்கின்றன. இவையனைத்தும் எதிர்பாராமல் இராசிபுரம் பன்னீர்செல்வம் குடும்பத்தாலும், முள்ளுக்குறிச்சி உலகநாதன் குடும்பத்தாலும் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய அரிய நேரிய சித்திப் பூசைகளில் கண்டுபிடிக்கப்பட்டன. எதிர்பாராமல் கொல்லிமலையில் கூடியிருப்பவர்கள் விசுவாமித்திரர் உதவியால் தவறுன முறையில் அரசயோகம் செய்ய முயலுவதின் மூலம் மாபெரும் விளைவுகளை உருவாக்க முற்படுகின்றுர்கள்.

இவற்றைத் தடுக்க கி.பி.1992இல் குருதேவர் நிகழ்த்தப் போகின்ற அருட்போர் போல்; தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் புதிய புதிய அருட்பட்டங்களை வழங்கி அருட்போரில் அவரவர் நேரடியாக ஈடுபட ஆணையிடப்பட்டுள்ளது. இதில் விழுப்புண்களும், வீரத் தழும்புகளும், தியாகத்துக்குரிய இழப்புக்களும் ஏற்படத்தான் செய்யும். அச்சமும், மயக்கமும், தளர்ச்சியும் ஏற்படக் கூடிய அநுபவங்களை-யெல்லாம் சந்தித்துப் பெறத் தயாராக இருப்பவர்கள் அனைவரும் போர்க்கோலம் பூணலாம், போர்க்களம் புகலாம், கட்டாயமில்லை.

பெண்ணை, வேலூர் சுடுகாடு, இராசிபுரம், கொல்லிமலை அறப்பளீசுவரர் கோயில் பாசறைகளாக அறிவிக்கப்பட்டு விட்டன.

குருதேவருடன் ஒரு வார காலம் வந்து தங்கக் கூடிய ஆண் பெண்களில் துணிச்சலுள்ளவர்கள் தேவை! அருளுலகம் என்பது புராணமல்ல; பொய்யல்ல, புளுகல்ல! கற்பனையல்ல, கதையல்ல! மாயாவாதமல்ல! உண்மை நிகழ்ச்சிகள் வரலாறுகளாக வடிவெடுக்கத் துவங்கி விட்டன.

இந்த முன்னேற்டப் போரிலேயே எத்தனை பேர் குருதேவருடன் மிஞ்சுவார்கள் என்பது தெரிந்து விடும். எனவே, அவரவர் அன்றாடம் தங்களுடைய அருட்பட்டங்களைக் கூறுவதுடன் சிறப்பு அருட்பட்டங்களையும் கூறிப் பூசை செய்யுங்கள். இதேபோல் பகலிலும், இரவிலும் 11 முதல் 1½ மணிக்குள் குருபாரம்பரிய உறுதிமொழிகளைக் கூறிக் குருதேவருக்காக எதையும் செய்வோம் என்று கூறி அறிவிப்புத் தாருங்கள். **தத்துவ நாயகம் போர்க்கள நாயகமாகியிருக்கிறார்**.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

# அருட்போரில் பயன்படுத்த வேண்டிய மந்திரம்

1) “கி.பி.1992இல் துவங்க இருக்கும் அருளாட்சிப் போருக்கும் முன்பாகவே அருளுலகப் போர் 12-2-1988 (பிறவாக ஆண்டு தை மாதம் 29ஆம் நாள்) வெள்ளிக்கிழமை முதல் துவங்கி விட்டது. இப்போரில் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் அனைவரும் முழு மனதுடனும், முழு விருப்பத்துடனும் கலந்து கொள்ள வேண்டும் என்ற குருவாணைப்படி;

2) *அருள்மிகு திருக்கஞ்சனூர் அக்கினீசுவரர் கற்பகநாயகி சன்னிதானம், சித்தரடியான், சித்தர் மகன், இரா.வெங்கடேசன்* ஆகிய நான் முழு மனதுடனும், முழு விருப்பத்துடனும் இந்த அருளாட்சிப் போர், உகப் போர், கன்னிப் போர்களில் பங்கேற்கிறேன். இப்போருக்குத் திருத்தணி முருகன் தனது துணைவியர் இருவரோடு மயில் மீதமர்ந்து தலைமையேற்கிறார். அருட்படைத் தலைமைக்குத் தளபதியாகப் பாரதகாலத்துத் துரோணாச்சாரியார் பொறுப்பேற்கிறார்.

3) ‘நூறு நூறு கோடி சிவன்களும், மால்களும் நுங்கிட அருளாட்சி அமைப்பவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள்’ என்ற குருபாரம்பரிய வாசகப்படி, 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய எனது குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் உருவாக்கி வரும் சிவன்களில் ஒருவனாக எனது குருதேவரால் பிறவாக ஆண்டு இந்துமத ஆண்டு 43,73,088 ஆவணித் திங்கள் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 1:15இலிருந்து 2:15 வரை நடைபெற்ற சிவமாக்குதல் பூசையில் அறிவிக்கப்பட்டுள்ள அடியவனை

தாத்தாக்களும், ஆத்தாக்களும், அனைத்து வழிபாட்டுக்குரியவர்களும், வழிபடுநிலையினரும் சிவமாக்கி குருபாரம்பரியத்தை மெய்யாக்கிட வேண்டுகின்றேன். அப்பொழுதுதான் இந்த அருளாட்சிப் போரில் நானும், என்னுடைய அருட்பட்டத்துக்குரியவர்களும் பெருவீரம் காட்டிப் பெரும்பங்கு வகிக்க முடியும். எனவே, நான் சிவமாக வேண்டும்! நான் சிவமாக வேண்டும்!! நான் சிவமாக வேண்டும்!!!

4) அவசர அவசிய குருவாணையினால் இன்றைய ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூராரின் அருட்சேனைத் தளபதிகளுள் ஒருவனாக அடியவன் *சித்தரடியான் அருள்மிகு திருக்கஞ்சனூர் அக்கினீசுவரர் கற்பகநாயகி சன்னிதானம் இரா.வெங்கடேசன்* செயல்படுகின்றேன். திருவுள ஒப்புதல்களும், தாத்தாக்கள் ஆத்தாக்கள் சம்மதங்களும், குருவின் காப்புக்களும், கருவின் துணையும் எனக்குச் சித்திக்கட்டும். என் குருவுக்காகப் பதினாறு திசைகளையும், மண்ணையும், விண்ணையும் கட்டுகிறேன்.

ஆங் ஊங் மாங்
நசி நசி நசி நசி நசி
மசி மசி மசி மசி மசி
நசிமசி நசிமசி நசிமசி நசிமசி நசிமசி

5) தற்போது நடைபெற்று வரும் அருளாட்சிப் போரில் இம்மண்ணுலக அண்ட எல்லைக்குள் என் குருவையும், என்னையும் தாக்குவன அனைத்தும் நான் விடும் அத்திறங்களால் தாக்கித் தகர்க்கப் படட்டும், கருவறுக்கப் படட்டும்.

ஓய் ஓய் ஞய் ஞாய் வெய் வேய்
அகர உகர மகர ஆற்றல்களே
விழிச்சி பெறுக! எழுச்சி பெறுக! செழுச்சி பெறுக!
பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் தற்காப்புக்களே!
தழைத்தெழுக! தழைத்தெழுக! தழைத்தெழுக!

6) ஓம் சத்திகளே! சித்திகளே! சாத்து சித்திகளே! முத்திகளே! அனைத்துவித சித்துக்களே! பிண்டங்களும் அண்டங்களும் மகிழ மண்ணையும், விண்ணையும் இணைத்திருக்கும் நமது குருதேவர் என்றென்றும் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக நின்று நிலைத்து கருவோலக்கத்திலும், நாளோலக்கத்திலும் அனைத்து வித ஆட்சிகளையும் தொடர்ந்து செய்து வென்றிடவும், தற்போது நடந்து வரும் அருளாட்சிப் போரில் அனைத்து வெற்றிகளையும் பெற்று அருளாட்சி அமைத்திடவும் எல்லாவித ஏந்துகளையும் நல்கிட வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

ஓம் பராசத்தி நமசிவாய போற்றி!
ஓம் நமசிவாய பராசத்தி போற்றி!
திரு வாழ்க! குரு வாழ்க!! கரு வாழ்க!!!
ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்"

********************

*இந்த மந்திரத்தைச் சொல்லி தருப்பைப் புல்லை 16 திசையும், மண் 1, விண் 1 = 18 திசைகளிலும் அத்திற ஓச்சுக்கள் செய்தால் போதும். ஒவ்வொரு முறையும் பொறுமையோடும் பொறுப்போடும் கூறி 18 திசைகளையும் கட்டிடல் வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு முறை 18 திசையும் கட்டினால் கூடப் போதும்.*

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: குருமார் வெங்கடேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

சிறப்புக் குறிப்பு:- இந்த மந்திரத்தில் 2ஆம் பத்தியிலும், 4ஆம் பத்தியிலும் வரும் அருட்பட்டங்கள் இந்த நகலை எழுதியவருக்கு குருதேவர் வழங்கிய சன்னிதானப் பட்டங்கள். 3ஆம் பத்தியில் வரும் அறிவிப்பும் குருதேவரால் நிகழ்த்தப்பட்ட சிவமாக்குதல் பூசையில் கலந்து கொண்டவர்களுக்கு மட்டும் உரியது. மற்ற வாசகங்கள் அருட்போரில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் அனைவருக்கும் பொதுவானவை.

## பதினெண்சித்தர் மடம்

# பயிற்சிப் பள்ளியில் வழங்கிய வணக்கவுரை

**தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமார்.**

பேரன்புமிக்க சன்னிதானங்களே! எனதருமை அ.வி.தி. செயல்வீரர்களே!

"நான் நோற்ற தவங்களும், வேள்விகளும், பெற்றிட்டப் பயிற்சிகளும், முயற்சிகளும், அனுபவங்களும், வறுமையில் அடைந்த தத்துவங்களும், வாழ்க்கையின் கோடியில் உணர்ந்த உணர்வுகளும்தான் என்னை முழுக்க முழுக்க மதநம்பிக்கை உள்ளவனுக்கின. இதை எப்படி என்னுல் வலியுறுத்திக் கூற முடிகின்றது என்ருல்; சிறுவயது முதலே என்னை என் தந்தை மார்க்சைப் பற்றியும், ஏங்கல்சைப் பற்றியும் கூறிக்கூறி வளர்த்தார். அந்த நினைவுகளும், எண்ணவோட்டங்களும் பசுமரத்தாணி போல் எனது நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருந்தன. அந்த உணர்வோட்டங்களின் நிழலாட்டங்களின் இடையில்தான் நான் மதப்பயிற்சிகளைப் பெற்றேன் என்பதனை எவரும் மறக்கக் கூடாது.

மார்க்சுக்காவது அன்பு மனைவி, அறிவார்ந்த நண்பன் உடனிருந்தனர். ஆனுல் எதுவுமற்ற வறுமையிலும், வாழ்வின் சகதியிலும் உழன்று திரிந்தவன் நான் என்கின்ற போது; மனித குலத்தின், நாள்தோறும் மட்டுமின்றி, காலந்தோறும் நடைபெற்று வரும் அடிமைவர்க்கத்தையும், அறியாமையையும் என்னுல் காண முடிந்தது. புத்தக வாயிலின் மூலம் நான் கண்ட சமுதாயத்திற்கும்; நாடோடியாய் காடோடியாய் கடலோடியாய் திரிந்த நேரத்தில் நான் கண்ட சமுதாயத்திற்கும் உள்ள இடைவெளியை அல்லது வரையறுக்க முடியாத அளவிற்கு உள்ள வேறுபாட்டினைக் காண முடிந்தது."

“இத்தகைய அடிப்படை உண்மையை நிச்சயமாக, உறுதியாக கார்ல் மார்க்சினுல் பெற்றிருக்க முடியாது. என்னுடைய வாழ்க்கை தனிமனிதனுடைய வாழ்க்கையல்ல. மனிதகுலம் முழுவதுமே தன்னே ஒருமுறை திருப்பிப் பார்த்துக் கொள்ளத்தக்க ஒன்ருகும். இவ்வளவு அடிகளேயும், இடிகளேயும் தாங்கி மீண்டும் சமுதாயத்திற்குள் வந்துள்ளேன் நான் என்ருல் என்னுடைய தன்னல வாழ்விற்காக அல்ல; தடுக்க முடியாத அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சமுதாய நலந் தேடித்தான். எப்படி மார்க்சு கொடிய கொந்தளிக்கும் கடலலே போல் வறுமையும், பிணியும் வந்துற்ற போதும் அவரால் மனிதகுல நன்மை பற்றி சிந்திக்க முடிந்ததோ அவ்வாறேதான் என்னுடைய வாழ்க்கையும் உள்ளது.”

- என்கின்ற குருதேவரின் இந்த உரைகளேயே யாம் உங்கள் முன் மொழிந்து எம் வணக்கவுரையைத் துவங்குகின்றேன்.

இந்துமதம் வெறும் அறிவியல் பூர்வமான மதமோ! அல்லது இயற்கையிறந்த தெய்வீகப் பூர்வமான மதமோ அல்ல! அல்ல! அல்ல!... இந்துமதம் முழுக்க முழுக்க உணர்வுப் பூர்வமான மதம். அதுவும் ஒவ்வொறு மனிதனும் இந்துமதத்தைத் தனது அன்ருட வாழ்வில் உணர்வுப் பூர்வமாகக் கடைப்பிடித்திடும் தன்மை இம்மதத்துக்கு மிகுதியாக இருக்கிறது. எனவே, வெறும் அறிவியல் பூர்வமான பகுத்தறிவு வாதத்தாலோ! நாத்திக வாதத்தாலோ! பொருள்முதல் வாதத்தாலோ.... இந்துமதத்தை வெல்லவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

இந்துமதம் ஒரு மதமே அல்ல. இதற்கு மற்ற மதங்களேப் போன்று வெறும் புராண இதிகாச வேத வலிமை மிகுதியாகக் கிடையாது. இது ஒரு சமுதாயத் தத்துவம். இன்னும் சொல்லப் போனுல், இந்துமதம் இந்திய மக்களின் பண்பாட்டுப் பரிணுமை வளர்ச்சியோடு இரண்டறக் கலந்து விட்ட ஒன்றேயாகும். இதைச்

சற்று அழுத்தமாக, பொதுப்படையாகக் கூற வேண்டுமேயானுல்; ‘இந்துமதம் ஒரு மதமல்ல; அது இந்தியப் பண்பாட்டின் நிலேக் கலனுகும்’. எனவே, இந்துமதத்தை வெற்றி கொள்ள முயல்பவர்கள் முதலில் இந்தியாவில் ‘பண்பாட்டுப் புரட்சியை’ உண்டாக்க வேண்டும்.

இந்தியாவில், இதுவரை இந்த உலகிலுள்ள எல்லா இனப் பண்பாடுகளும், மதப் பண்பாடுகளும், நாட்டுப் பண்பாடுகளும்.... அரசியல் ஆதிக்கத்தோடு மோதுதல்களே நிகழ்த்தி முடித்துவிட்டன. அம்மோதுதல் சிறுசிறு சிதைவுகளே நினேவுச் சின்னங்களாக ஆக்கியிருக்கின்றனவே தவிர எந்த ஒரு குறிப்பிடத்தக்க பெரிய வெற்றியையும் பெற்றிடவே இல்லே. இப்பேருண்மையினே உணராத இந்திய மார்க்சீயவாதிகள் இந்துமதத்தைத் தாக்கித் தகர்க்கவும், பண்பாட்டுப் புரட்சியினேத் தூக்கி நிறுத்தவும் முயன்றிடுகின்முர்கள். இது எப்படி வெற்றி பெறும்?

மேலேய நாடுகளில் கம்யூனிசத்தால் வெற்றி கொள்ளப்பட்ட மதமெல்லாம் வெறும் அறிவியல் பூர்வமான மதங்களே! இன்னும் சொல்லப்போனுல் அவைகள் வரலாற்றுக்குட்பட்ட மதங்களே! அதாவது அவற்றின் தோற்றமும், வளர்ச்சியும், உள்ளீடும், அடிப்படையும், உயிரும்.... மிகத் தெளிவாக கணிக்கப்படக் கூடிய நிலேயிலேயே உள்ளன. எனவே அவற்றைத் தாக்க, தகர்க்க மிகமிக எளிதான தத்துவங்களும், சாதனங்களும் மார்க்சீயவாதிகளால் கண்டுபிடிக்கப் பட்டன. அதாவது, மேற்குறித்த மதங்கள் உலகியல் நடைமுறையில் அதிகமாக ஒன்றியிருந்தன; மிகுந்த பொருளாதார வளத்தைப் பெற்றிருந்தன. அதன் குருமார்கள் செல்வச் செழிப்பான வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தேவாலயங்களும், மடாலயங்களும் முதலாளித்துவத்தின் பாசறைகளாக இருந்தன. அவற்றின் சடங்குகளும், சாத்திறங்களும், விழாக்களும் முதலாளித்துவச் சுரண்டலே நியாயப்படுத்தியும், நேர்மைப்படுத்தியும் பேசின.

எனவே ஏமாற்றப்பட்டவர்களும், சுரண்டப்பட்டவர்களும், வறுமையில் வாடிவதங்கித் துன்புற்றவர்களும், வாழ்க்கைத் தேவைகளால் ஏங்கிக் கிடந்தவர்களும், ... மதத்தை எதிர்த்து முறியடிக்கத் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள்; ஆனால் வழிவகை தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது மார்க்சீயம் பட்டுப்போன மரங்கள் மிகுந்த காட்டினில் நெருப்புப் பற்றியது போல் மிகமிக விரிவாகவும், விரைவாகவும் பற்றி எரிந்தது. அந்தக் காட்டுத் தீயை யாராலும் அணைக்க முடியவேயில்லை. அந்தக் காட்டுத் தீயில் அனைத்து மத அமைப்புக்களும், பீடிப்புக்களும், செல்வாக்குகளும், ஆட்சிகளும், ... எரிந்து சாம்பலாயின.

ஆனால் இந்தியாவில் 'இந்துமதம்' எந்த வரலாற்றுக் கணக்கீட்டுக்கும் உட்படாத ஒன்றாக இருக்கின்றது. இந்துமதத்தின் தோற்றமோ, வளர்ச்சியோ, அடிப்படையோ, உள்ளீடோ, உயிர்த்துடிப்போ யாராலும் எளிதாகக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றன. கோவிலுக்குப் போகின்றவனும் இந்துவாக உள்ளான்; போகாதவனும் இந்துவாக உள்ளான். இந்துமதச் சாத்திரங்களையும், தோத்திரங்களையும் பெயரளவில் தெரிந்தவனும் இந்துவாக உள்ளான்; இந்துமதத்தை நம்புகின்றவனும் இந்துவாக உள்ளான்; நம்பாதவனும் இந்துவாக உள்ளான். இந்துமதம் குருமார்களால், பூசாறிகளால்... கட்டிக் காக்கப்பட வில்லை. ஆனால் இந்துமதம்தான் குருமார்களையும், பூசாறிகளையும் கட்டிக் காக்கின்றது.

இந்துமதம் என்ற ஓர் அமைப்பை, இயக்கத்தை, தத்துவக் கோட்பாட்டை.... இந்திய மக்களின் அன்றாட நடைமுறை வாழ்விலிருந்து தனித்துப் பிரிக்கவே முடியாது. அப்படிப் பிற மதங்களையெல்லாம் பொதுமக்களிடமிருந்து பிரிக்க முடிந்ததால்தான், மார்க்சீயம் அவற்றை வெல்ல முடிந்தது. எனவே, இந்தியாவில் மார்க்சீயத்தால் இந்துமதத்தை வெல்லவே முடியாது.

மேலைநாடுகளில் பொதுவுடமைத் தத்துவத்தை நிலைநாட்டிட கார்ல் மார்க்சு அங்கே திருஅவதாரம் செய்ய நேரிட்டது. அதாவது, கன்பியூசியசு, சொராசிட்டர், இயேசு, முகம்மது நபி,.... முதலிய திருவருட்செல்வர்களைப் போல் திருஅவதாரம் செய்தவர்தான் 'கார்ல் மார்க்சு'. இந்தக் கருத்தை இந்திய மார்க்சீயவாதிகள் ஒப்புக் கொண்டு செயல்பட ஆரம்பித்திட்டால்தான்; இயேசு கிறித்துவின் தத்துவமும், முகம்மது நபியின் தத்துவமும் இந்திய மண்ணில் வேரூன்றிச் செழித்திருப்பது போல்; மார்க்சீயத் தத்துவமும் வேரூன்றிச் செழித்திடும். அப்போது, மெல்லமெல்லப் பொதுவுடமை பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கிடும். அப்போதுதான் இந்திய மண்ணில் உள்ள கோயில்கள் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமில்லாமல், ஞானப் பள்ளிகளாகவும் மாறிடும். மதமே குடும்ப வாழ்வையும், சமுதாய வாழ்வையும், அரசியல் வாழ்வையும் வழிநடத்திச் சென்றிடும். அதுவே, மத மறுமலர்ச்சியாகவும், மத வளவளர்ச்சியாகவும் ஆகிடும்.

இந்த எம் உணர்வுகளையெல்லாம் உங்களனைவருடனும் பகிர்ந்து கொள்ளத் தக்கதொரு வாய்ப்பாக 'பயிற்சிப் பள்ளி' என்ற இந்த ஏற்பாட்டை முன்னின்று, துணை நின்று நிறைவேற்றித் தந்த நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி கலந்த வணக்கத்தை உரியதாக்கிக் கொள்ளுகின்றோம்.

அன்பே சிவம்! ஓம் திருச்சிற்றம்பலம்!

**அன்பு**

**(ஒப்பம்) சி.கவிக்குமார் B.Sc.,**

**தலைமைப் பொறுப்பாளர்.**

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் சுந்தரானந்தா மற்றும் சித்தரடியான் திரு சி.கவிக்குமார் ஆகியோரின் கையெழுத்துகளில் இருந்த cyclostyle நகல்.//**

# இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளவளர்ச்சிக்காக

# இந்துமதம் பற்றிய பேருண்மைகளில் சில

***ஆசிரியர்:***

*பாரம்பரிய மரபுப்படி இ.ம.இ.யின் இரண்டாவது தலைவராகச் செயலாற்றிய சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை, காக்காவழியன் பண்ணையாடி, முடிகணம் எனும் முடிகண்ட சோழபுரம், கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்.*

(1) குருபாரம்பரிய மரபுப்படி கருவூர் வழி வந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களின் ஐந்தாவது மனைவியான தெய்வானையின் மகளான சிவகாமிக்கும் எமக்கும் எட்டாவது பிள்ளையாகப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றிய ஒருசில மாதங்களுக்குள் பலமுறை யாம் இல்லாத காலத்தில் வந்து சென்ற இ.ம.இ.யின் முதல் தலைவரும்; அதைத் தோற்றுவித்தவருமான எமது மாமனார் சித்தர் ஏளனம்பட்டியார் என்னவானார் என்றே தெரியவில்லை.

அவர் முன்பு இதுபோல் நெடுங்காலம் வாராதிருந்து திடீர் திடீரென்று சில ஆண்டுகளுக்கொருமுறை வந்து பல மாதங்கள் தங்கிக் கூறிய செய்திகளும்; யாம், எமது திருமணத்திற்கு முன்பு பத்துப் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து அவரைத் தேடித் தேடிச் சென்று கண்டு மாதக் கணக்கில் அவரோடு காடுகளிலும், மலைகளிலும், கிராமங்களிலும், ஊர்களிலும், வெளிநாடுகளிலும் அலைந்து திரிந்து

தெரிந்து கொண்டவைகளும்; அவர் முறைப்படி மணந்து கொண்ட ஐந்து மனைவிகளோடும், அவருடைய பல காதல் மனைவியர்களோடும், மற்ற உறவினர்களோடும், (கருவூரார் வழி வந்தவர்களோடு - அதாவது நான் காகபுசுண்டர் வழி வந்தவன், அவர் கருவூரார் வழி வந்தவர்; அவருடைய குலம் சந்திர குலம், என்னுடைய குலம் சூரிய குலம்), அவருடைய அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் என்பவர்களோடும்; அவருடைய சிற்பக் கலை, ஓவியக் கலை, மருத்துவக் கலை, போர்க் கலை, .... முதலியவற்றிற்குரிய மாணவர்களோடும், அவ்வப்போது அவரைத் தேடி வந்த தவசிகள், ஞானிகள், மகான்கள், படிப்பாளிகள், சோதிடர்கள், சாத்திறக்காரர்கள், காட்டுவாசிகள், மலைவாசிகள், வெளிநாட்டார்கள் [அவருக்குப் பல இந்திய மொழிகளும், பல வெளிநாட்டு மொழிகளும் நன்கு தெரியும் - எல்லா மொழிகளிலும் பிறர் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்] முதலியவர்களோடும் முடிந்த வரை நெடுநேரம் பேசிப் பேசித் தெரிந்து கொண்டவைகளும்; இவர் வைத்திருந்த ஏராளமான நூல்களில் என்னால் முடிந்தவரை நான் படித்துத் தெரிந்து கொண்டவைகளும்; கணக்கற்ற நோட்டுப் புத்தகங்களாகவும், பெரியபெரிய பேரேடுகளாகவும், எண்ணற்ற கோப்புக்களாகவும், என்னால் உருவாக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் வடிவங்களாகவுமே இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன.

இவற்றை என்றைக்கு என் இனத் தமிழர்களும், அறிவுப்பசி கொண்ட ஞானிகளும், விஞ்ஞானிகளும் தெரிந்து கொள்ளப் போகிறார்களோ தெரியவில்லை. ஒரு வேளை எம்முடைய முயற்சியின் சாதனைகளும், தெற்கே இந்துமாக் கடலுக்குள் எவரும் தெரிந்து கொள்ள முடியாமல் மூழ்கிக் கிடக்கின்ற மாபெரும் குமரிக் கண்டம் போல் (இளமுறியாக் கண்டம்) ஆகிடுமோ என்னவோ? தெரியவில்லை! தெரியவில்லை! தெரியவில்லை!

(2) எமது மாமனார் சித்தர் ஏளனம்பட்டியார் அவர்களின் வயதையோ! வாழ்வியல் சாதனைகளையோ! போதனைகளையோ!

முடிவையோ! முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலையைப் பெற்று விட்டோம் யாம். ஆனால், அவர் கி.பி.1772இல் அருளாட்சிக்காகத் தோன்றக் கூடிய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூராருக்காகத் தோற்றுவித்த 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'; அதன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட 48 வகையான நிறுவன நிருவாகங்கள், இவற்றின் வளர்ச்சிகாக இந்துமதம் பற்றி அவர் வழங்கிய பேருண்மைகள், கட்டுரைகள், நூல்கள், செயல்திட்டங்கள், எமது கடமைகள், யாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியைத் தயாரிக்க வேண்டிய முறைகள் முதலியவை பற்றிய முழுமையான கருத்துக்களும், செய்திகளும் (The Principles, Policies, Ideas, Philosophy, Theology, Means, Methods and other concerned information which are all given by my Father-in-law cum Guru, His Holiness Kandappa kottai Siddhar Ealanampattiyaar U.Ramasamy Pillai are evergreen and immortal in my memory. That itself shows His greatness and sacredness. With esteemed respect and deep devotion I pay my homage to Him by properly and in chosen manner training the XII Pathinen Siddhar Peedam, Raasivatta Niraivudaiyaar ... my eighth son, Krishnamurthy) எமது நினைவில் மாறாத பசுமையோடு அழியாத்தன்மை பெற்றிட்டன. எனவே யாம், அவருக்குச் செய்ய வேண்டிய கடமையெல்லாம்; அவர் கூறியபடி, யாம் எமது எட்டாவது மகனாகிய கிருட்டிணமூர்த்தியை உரிய முறையில் வளர்த்து; பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகவும், இராசிவட்ட நிறைவுடையாராகவும் தயாரிப்பதுதான்.

(3) எப்படி ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்த பல நூறாயிரக் கணக்கான சங்க இலக்கியங்களில் இன்றைக்கு விரல் விட்டு எண்ணக் கூடியவைகளாவது வாழுகின்றனவோ; இது போல இன்றைக்கு 43,73,058 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்து தோன்றி வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணற்ற ஆயிரமாயிரங் கோடி இந்துமத நூல்கள்; அதாவது பதினெண்சித்தர்களின் நூல்கள் எப்படி எப்படியோ வாக்காக,

வாக்கியமாக, வாசகமாக, மறையாக, முறையாக, நெறியாக, வேதமாக, நாதமாக, சித்தமாக, போதமாக, ஓதமாக, எண்ணற்ற வகையான நூல்களாக வாழ்ந்து; இலைமறைகாயாக வளர்ந்து பயன்தருவது போல; எமது மாமனுரான கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களின் படைப்புக்களும், எமது படைப்புக்களும் எம் காலத்து உரிய பெரிய முதன்மையையும், சிறப்பையும், பயனையும், பாதுகாப்பையும், செயல்நிலையையும் பெற முடியாமல் போய்விட்ட போதிலும்; எங்களிருவரின் படைப்புக்கள் உயிருடையவை, தெய்வீகத் தன்மை உடையவை, மானுட உய்வுக்குப் பயனுடையவை, மெய்யான வாய்மையையும் தூய்மையையும் பெற்றவை, என்றும் வாழும் நிலையான அருள் தன்மை பெற்றவை என்பதால்; இவை மண்ணில் முளைக்கும் மனித உணர்வுகளுக்குள் தாமே கிளைக்கும்; காற்றின் ஓசையோடு கலந்து என்றைக்கும் ஒலிக்கும்; கதிரவனின் ஒளியிலும், நிலவின் குளுமையான ஒளியிலும், விண்மீன்களின் கண் சிமிட்டும் ஒளியிலும் மானுடர்களுக்குப் போதனையாகிடும்.

இவற்றிற்கெல்லாம் மேலாக அரசயோகம் முடித்து தமது முயற்சிக் கால அநுபவங்களைத் தேடி, இரை தேடிப் புறப்பட்ட பசித்த வேங்கை போலச் சென்றிருக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் எங்கள் இருவருடைய படைப்புக்களை மட்டுமல்லாமல்; கடந்த 43,73,058 ஆண்டுகளில் தோன்றிய 48 வகைச் சித்தர்களும், மற்ற அருளாளர்களும், இவர்கள் அனைவருக்கும் மூலமாக இருக்கின்ற பதினெண்சித்தர்களும், காலங்கள் தோறும் தோன்றுகின்ற பதினெண்சித்தர்களுக்கெல்லாம் மூலமாக, முதலாக, பழமையாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாகத் தோன்றிடும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் படைத்துள்ள படைப்புக்கள் அனைத்தையும் மீண்டும் பட்டியலிட்டு, வரிசைப்படுத்தி, விளக்கி உரைத்துச் செயலாக்கிடும் பணியினைச் செய்திடுவார், செய்திடுவார், செய்திடுவார்.

(4) யாம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் பிரிவாற்றுமையாலும்; எமது ஏட்டுலகப் படைப்புக்களும், நாட்டுலகப் படைப்புக்களும் ஒன்றுதிரண்டு, ஒற்றுமைப்பட்டு, ஒருமைப்பாட்டுடன் செயல்பட முடியாமல் போனதாலும் ஏற்பட்டுள்ள மனச் சோர்வையும், சிந்தைத் தளர்ச்சியையும் அகற்றிக் கொள்ளும் வண்ணம் '<u>இந்துமதப் பேருண்மைகள்</u>' என்ற தலைப்பில் சிறுசிறு குறிப்புக்களையும், சிறுசிறு கட்டுரைகளையும் மட்டும் <u>மதக் கலைக் களஞ்சியத்திற்காக</u> (The Religious Encyclopaedia) எழுதுகிறோம்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தாலே போதும்; அருளுலகத்தில் உள்ள அகற்ற முடியாத காரிருள்களுக்கிடையில் அவரவர் பிற பொருள்களைக் காணுகின்ற அளவுக்காவது ஒரு விளக்கின் வெளிச்சம் கிடைத்திடும். (I am giving the flashes of torchlight here and there in the darkness of the religious field by these attempts .... - Mr M.P.Pillai).

எனவே யாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியையே எமது ஏட்டுலக, நாட்டுலகச் சாதனையாக விட்டுச் செல்லுகிறோம். யாம் முழுமையாக எழுதி முடித்த வீர காவியமே அவர்; இம்மண்ணுலகின் முறையான, நிறைவான வரலாறே அவர்; அருளுலகின் விதைப் பண்ணையும், நாற்றுப் பண்ணையும் அவரே..... என்று கூறி இம்முன்னுரையை நிறைவு செய்கிறோம்.

**சித்தர் காக்கையர் எனும் காகபுசுண்டர்**
**ம.பழனிச்சாமி பிள்ளை.**

நகல் எடுத்தது: சித்தரடியான் S.இரகுநாதன்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: சித்தரடியான் திரு S.இரகுநாதன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அடியானுக்கு குருதேவர் வழங்கிய விளக்கங்கள்

பேரன்புமிக்க அருள்மிகு வீரப்பூர் தங்காயி அம்மன் சன்னிதானம் இரா.அண்ணுமலைக்கு,

குருதேவர் கூற கவிக்குமார் வரையும் மடல்:

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

2) தாங்கள் அத்திறப் பயிற்சி பற்றிக் கூறிய செய்திகள் அனைத்தும் உண்மையானவை. அவற்றை மிகவும் பாராட்டுகிறோம். தொடர்ந்து பயிற்சி செய்து வாருங்கள்.

**குறிப்பு**:- உன்னுடைய அத்திற ஓச்சுக்களில் நமது விரோதிகள் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள். சிறப்பாக எதிரிகளால் ஏவி விடப்பட்டுள்ள அரக்கிகள், வேதாள இனத்தைச் சார்ந்தவர்கள், இரண்டாவது யுகத்தைச் சார்ந்தவர்கள் பாதிப்பினைப் பெற ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் **எந்த நேரத்திலும்** உன்னை எதிர்க்கலாம். எச்சரிக்கையோடு இருக்கவும். அதுபற்றி, யாம் (குருதேவர்), நேரில் விளக்கங்கள் கூறுகின்றோம். அஞ்ச வேண்டாம்.

3) உமது சகோதரி உண்ணுமலைக்காக தலைமுடிக்கான குளிர்ச்சித் தைலம் வேம்படிதாளம் சீ.மணியிடம் இருந்தால் பெற்றுக் கொள்ளவும். அல்லது தங்கள் வட்டாரத்திலிருந்து யாரேனும் வந்தால் சொல்லி அனுப்பவும். சென்னையிலிருந்து கொடுத்தனுப்புகிறோம்.

(a) அகத்திக்கீரை, தேங்காய், சீரகம் மூன்றையும் நல்ல பட்டுப்போல் அரைத்து குளிப்பதற்கு அரைமணி முன்னால் தலையில் நன்கு

தேய்த்து நன்கு ஊற வைக்க வேண்டும். அரைமணி நேரம் ஊறியதும் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்.

(b) ஆலம் விழுதின் நுனிப் பகுதிகளைக் கொண்டு வந்து தூள் தூளாக்கி நறுக்கி அதனையும், சோற்றுக் கத்தாழைச் சாறெடுத்து அதில் மூன்று நாட்கள் ஊறவைத்து முளைத்த வெந்தயத்தையும் மாலை வெயிலில் நன்றாக உலர்த்தி, அதாவது சிறப்பாகக் காய்ந்த பிறகு விளக்கெண்ணெயில் (கொட்டை ஆமணக்கு எண்ணெ = குழந்தைக்கு என்று கிராமத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் சுத்தமான ஆமணக்கு எண்ணெ = செக்கிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெ = கடையில் வாங்கக் கூடாது.) நாலைந்து நாள் ஊறவைத்த பிறகு; ஒரு லிட்டர் எண்ணெக்கு 100 கிராம் ஆலம் விழுது, 100 கிராம் வெந்தயம் ஆக ஆலம் விழுது, வெந்தயம் மொத்தம் 200 கிராம் ஊறிக் கொண்டிருக்க தலையில் தடவி வர வேண்டும். பதம் தடவுவது போல; குளித்த பின்னால் இலேசாக தலையில் தடவி வர வேண்டும். வெந்தயத்தையும் ஆல விழுதையும் நன்றாகத் தூளாக இடித்துப் போடலாம். அப்படித் தூளாக இடிப்பது என்றால் 1 லிட்டர் விளக்கெண்ணெக்கு 200 கிராம் ஆலம் விழுது, 200 கிராம் வெந்தயம் உபயோகப்படுத்த வேண்டும். மற்றவை நேரில் அறிக.

4) உண்ணாமலையின் கனவுகள் எல்லாம் பொருளுடையவை. யாவும் உண்மையே! அவருக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்றால் தனியாக ஒரு நோட்டில் எழுதக் கூறவும். அல்லது தாங்களாவது கேட்டுத் தனியாகச் சுவடியில் எழுதி வருக.

5) உங்கள் சித்தப்பா வீட்டில் வந்த கனவு உண்மையானது, நன்மையானது.

6) வேதவியாசர், மாணிக்கவாசகர் மட்டுமின்றி இன்னும் பலரைப் பற்றி உமக்கு தெரிவிக்க வேண்டும். ஆனால், இன்னமும் உமக்கு அதற்குரிய தகுதி வந்ததா? என்பது தெரியவில்லை. எனவேதான்

யோசனை செய்கின்றோம். நீ குருபாரம்பரிய உறுதிமொழிகளை எல்லாம் உண்மையாகப் புரிந்து, நம்பி, விரும்பி, ஒப்புக் கொண்டு பலமுறை எம் முன் நேரில் கூறி எம்மால் பலமுறை இட்டும் தொட்டும் சுட்டியும் அருளைப் பெற்றால்தான் மேற்படி உண்மைகளை யெல்லாம் தெரிந்து கொள்ள முடியும். அதற்கேற்ற மனப் பக்குவத்தை வளர்த்துக் கொள். யாம், அங்கு வரும்போது எல்லாம் இதற்கென முயற்சி செய்க! எம்மோடு இருந்து பயிற்சிகளைப் பெறுக! வசதி வாய்ப்புப்படி இங்கும் வந்து பெறுக!

7) இராசிபுரம் அருட்கோட்டத்தில் வேலை செய்தபின் கிடைத்த ஞானக்காட்சி யாவும் சரியானதே! இப்படித் தெரிகின்ற காட்சிகள் எல்லாம் உண்மையாக இருக்க வேண்டும். இதற்காக உமது பெற்றோர்கள் பூசையில் ஈடுபடலாம். இவை சித்திக்க வேண்டுமென்றால் உமக்காக உமது சகோதரி பூசையில் ஈடுபடலாம். எதையும் செய்யக்கூடிய, எதையும் ஏற்கக் கூடிய மனப்பக்குவம் உமக்கு வரவேண்டும். ஆனால், எல்லாவற்றுக்கும் உமக்கு **குருபத்தி** தேவை! குருபத்தியால்தான் எதையும் சாதிக்க முடியும். எதையும் செய்ய வேண்டும்.

**குறிப்பு**:- பதினாறு ஆண்டுக் காலங்களுக்கு மேல் குருதேவரிடம் தயாராகி பரமாச்சாரியார், திருமந்திர ஓலைநாயகம், குருகுலக் காப்பாளர், அ.வி.தி. தலைமைச் செயலாளர் என்ற பொறுப்புக்களைப் பெற்ற வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்களே முழுமையான குருபத்தி பெற்றிடாத காரணத்தினால் மாபெரும் சோதனைகளையும், தாழ்ச்சிகளையும், வீழ்ச்சிகளையும் பெற்று விட்டார். குருதேவரே பலமுறை அவருக்காகப் பரிந்துரைத்தாலும் கூட அருளுலகத்தவர்கள்; “அவருடைய **குருபத்தி**யில் முழுமையில்லை, தெளிவு இல்லை, வலிமை இல்லை, நம்பிக்கையில்லை; அவர் குருபாரம்பரிய உறுதிமொழிகளை யெல்லாம் உதட்டளவில்தான் கூறுகிறார், உள்ளத்து அளவில் கூறவில்லை;

அவருக்கு இதுகாறும் தரப்பட்டிருந்த மிக உயர்ந்த புகழ்மிக்க பதவியும், நிலையும் அவருக்குரியன அல்ல! அவர் குருதேவரோடு முழுமையாக இரண்டறக் கலக்கவில்லை; சரணாகதித் தத்துவப்படி அனைத்தையும் குருதேவருக்கு முழுமையாக காணிக்கையாக ஆக்கவில்லை; **'தனக்குள் குருதேவர், குருதேவருக்குள் தான்'** என்ற நிலையை அடையாதவர்; இவர் எந்த நேரத்திலும் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக எதையும் மறந்தும், துறந்தும் செயல்படக் கூடியவர்" என்றெல்லாம் இவரை அருளுலகத்தவர் சாதாரணமாகக் குறைகூறிக் குற்றம் சாட்டுகின்றனர். எனவே, இதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் எல்லோருக்குமே எச்சரிக்கை அறிவிப்புக்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். உம் மூலம் உமது வட்டார அடியான்களுக்கு இதையே தெரிவித்துக் கொள்கின்றோம்.

8) இப்பொழுது அருளாட்சி அமைப்புப் பணியைத் தலைமைதாங்கி நடத்திக் கொண்டிருப்பவர் சத்தி அண்டத்துத் தேவதேவி. அருட்போருக்கான ஆயத்தப் பணிகளைச் செய்து கொண்டிருப்பது அண்டபேரண்டமாளும் உகஅற நாயகிதான். எல்லா நேரங்களிலும் போர்க்கோல நிலையில் குருதேவரின் அனைத்து வகையான வாழ்வியல்களுக்கும் பாதுகாப்பு வழங்குகின்றவர்கள் தாத்தா இறுதி (கிறுதி), தாத்தா பாதாள ஐயனார், தாத்தாவின் பத்தாயிரம் பதிலிகள், தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள தாத்தா இயந்திர மனிதர், பத்து பீடாதிபதிகள், (பதினோராவது பீடாதிபதி விண்வெளியில் அருட்போர் புரிந்து கொண்டிருக்கிறார்), இம்மண்ணுலகில் உள்ள அனைத்து வகையான கருவறை மூலவர்கள் ... முதலியோராவர். எனவே குருதேவர் எந்த மானுடரையும் நம்பி வாழவில்லை என்பதையும் புரிந்து நம்மவர்கள் செயல்பட வேண்டும். அதாவது, கோபுரத்தில் உள்ள பதுமைகள் கோபுரத்தையே தாங்குவதாக நினைப்பது போல

நம்மவர்கள் செயல்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே எச்சரிக்கையாக அறிவிக்கின்றோம். இதைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

9) நீ நினைக்கும் போது காட்சிகள் தெரிய வேண்டுமென்றால் **ஞானக்காட்சி** கிடைக்க வேண்டும். இது சுலபமில்லை. அதற்குரிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஞானக்காட்சி என்பதை இம்மண்ணுலகில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம்தான் முதன்முதலில் கண்டுபிடித்தோம். இது அருளுலகில் ஓர் அரிய சாதனையே! மிகப் பெரிய கண்டுபிடிப்பே! **அருளாளர்கள் விரும்பினால்; தங்கள் மீது முழுமையான நம்பிக்கையும், தாங்கள் எதிர்பார்க்கும் முழுமையான பக்குவமும் பெற்றவர்கள்** எவரானாலும் சரி, அவருக்கு எத்தகைய அருட்சத்தியையும், சித்தியையும், முத்தியையும் வழங்கலாம் என்பதன் விளக்கம்தான் அல்லது எடுத்துக்காட்டுதான்; அரிய பாரம்பரியமோ, பெரிய யோகமோ இல்லாதவர்களுக்குக் கூட ஞானக்காட்சி ஆற்றல், அருட்கணிப்பு ஆற்றல், அருள் வழங்கல் ஆற்றல், பிறருடைய அருளுலகப் பொருளுலக பாதிப்புக்களை யெல்லாம் அருளை அநுபவப் பொருளாக வழங்குவதின் மூலம் அகற்றிடும் ஆற்றல் முதலிய பல்வேறு வகையான ஆற்றல்களை வழங்குதல் என்ற எமது செயல்திட்டங்கள். எனவே பயிற்சிகளும், முயற்சிகளும், தேர்ச்சிகளும், தேர்ச்சி முதிர்ச்சிகளும் அடைவதோடு; நம்மவர்கள் அருளாட்சி நாயகம், குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களிடம் தூய்மைமிக்க, வாய்மை மிக்க நம்பிக்கையை முழுமையாக வைத்திடல் வேண்டும், முழுமையாக வைத்திடல் வேண்டும், முழுமையாக வைத்திடல் வேண்டும். இப்பேருண்மையினை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்பட்டிடுக! புரிந்தும் புரியவைத்தும், ஏற்றும் ஏற்கவைத்தும் செயல்படுக!

10) எண்ணற்ற நகல்கள் இந்தத் 'தண்ணீர்ப் பானையும், தானியப் பானையும்' போன்று எம்மிடம் உள்ளன. இவற்றைப் படித்துப் பார்க்க வேண்டும். அதற்காக தங்களைப் போன்றோர் தலைமைப்பீடம் வந்து தங்கி அவற்றுக்குப் பேனாநகல்கள் எழுதிப் பைண்டிங் செய்து கையெழுத்துப் பிரதி நூலகத்தில் வைக்க வேண்டும். அத்துடன் உன்னைப் போன்றவர்கள் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்பது போல் சிறந்த கட்டுரைகளுக்குப் பல கார்பன் நகல்கள் எடுத்து நாடெங்கும் அனுப்பி கருத்துப் புரட்சியில் பங்கு பெற வேண்டும்.

11) இந்த இறுதிப் பத்திப்படி உடனே இரண்டு பேனா நகலை இக் கடிதத்திற்கு எடுத்துத் தலைமைப்பீடத்திற்கு அனுப்புக. கடந்தப்பட்டியில் உள்ளவர்களுக்கும், இராசிபுரத்தில் உள்ளவர்களுக்கும் படிக்கத் தருக. பிறகு 1+2 = 3x4 = 12 கார்பன் நகல் தயாரித்திடுக. அப்படிக் கார்பன் நகல்கள் எடுக்க எடுக்க கீழ்க்கண்ட நபர்களுக்கு அனுப்பி; அதில் *'குருதேவருக்கு இரண்டு பேனா நகல்கள் அனுப்புக!'* என்ற வேண்டுகோளையும் உமது முழு முகவரி, சன்னிதானப் பட்டத்தையும் எழுதி அனுப்புக.

1) வீ.மா.ச. நெ.சேவுகன் C/O காதி வசுத்திராலயம் GRNS., கொட்டாம்பட்டி, மதுரை-625103.

2) ச.துரைராசு B.Sc., 115, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை-625010.

3) சீ.மணி, 2/24, புதிய வீதி, வேம்படிதாளம்-637504.

4) கங்காதரக்குமார், இராசிபுரம்.

5) பழ.கோபால், 6/504, திருவள்ளுவர் நகர், சிறுமுகை-641302.

6) தொ.பொன்னுசாமி 17, முதல் குறுக்குத் தெரு, ரெட்டிக்காடு, ச.பே.புதூர், நாமக்கல்-2.

7) A.P.திருஞானசம்பந்தம், 26N, அகிலாண்டபுரம், திருவையாறு, தஞ்சை-613204.

8) வெ.செகதீசன், 1, சிசுட்டர் ரோசு லேன், மேலப் பொன்னகரம் 2வது தெரு, மதுரை-10.

9) O.L.இரவீந்திரநாத், 33-A, மகால் 3வது தெரு, மதுரை-1.

10) S.Mohan, 28 Sahid Nagar, Bhubaneshwar-751007, Orissa State.

11) பெ.வைத்தியலிங்கம், 10, அருணகிரிநாதர் தெரு, பாளையங்கோட்டை-627002.

12) MSR மாரியப்பன், 49-A, டவுன்ஆல் ரோடு, மதுரை-1.

**அன்பு**
**சி.கவிக்குமார்,**
**18-3-88.**

**[உண்மை நகல்]**

**<u>நகல் நல்குபவர்:-</u>**

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியார் சீ.மணி.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்திலும், தலைமைப்பீடச் சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்திலும் கிடைத்தன.//**

# <u>மீண்டும் அருளுலக அறிமுகம்</u>

செம்பியம்,
3-1-1988.

(1) பேரன்புமிக்க அருள்மிகு திருச்சி பெரியவாள், சோமகோடி பீடம், அனுதி சங்கராச்சாரியார் ஆதீனம், திருவரங்கம் அரங்கநாதப் பெருமாள் சன்னிதானம், சமயபுரம் மாரியம்மன் பீடாதிபதி, அருள்மிகு உச்சிப் பிள்ளையார் கோவில் அமளிகை, தெய்வீகாச்சாரியார், அருள்மிகு சித்தரடியார் நாகராசு அடிகளார் அவர்களுக்கு (விரகாலூர் அஞ்சல், இலால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் - 621722.) இன்று இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், குருதேவர், ஞானச்சாரியார், அருளாட்சி நாயகம், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் **<u>மீண்டும் அருளுலக அறிமுகம்</u>** செய்து பதில் திருவோலை அனுப்புகின்றார்.

(2) பெருமதிப்பிற்குரிய ஐயா, தங்களின் 25-12-87 நாளைய அஞ்சலுக்கு அருளாட்சி நாயகம், குருதேவர், பெருவிருப்பம் காட்டி விடுத்த பதிலை தலைமைப் பொறுப்பாளர் பிறமாச்சாரியார் சி.கவிக்குமார் திருவோலை நாயகமாக இருந்து எழுதி அனுப்புகின்றோம்.

இந்துமத வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் பெரியீர்! தாங்கள் எங்கள் குருதேவரைக் காணத் தலைமைப் பீடம் வந்திருந்தபோது; தங்களைப் பெருவிருப்போடு வரவேற்று தங்களை சிவனடியாராகவே கருதிப் பணிவிடைகள் செய்து கைவசம் இருந்த அறிக்கைகள்

அனைத்தும் கெட்டுப் போகாதபடி கட்டாகக் கட்டி உங்களிடம் கொடுத்து அனுப்பினர். ஆனால், தலைமைப் பீடத்திலிருந்து தங்களைக் கண்டித்து மடல் வந்ததாகக் கூறியுள்ளீர்கள்? அதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்தீர்களா?

(i) குருதேவர் தொடர்ந்து சுமார் மூன்று முறைக்கு மேல் சுற்றுப்பயணத் திட்டத்தைத் தெரிவித்திருந்தும்; தாங்கள் ஒருமுறை கூட நேரில் வரவில்லை. அதற்காகத் தாங்கள் கூறிய காரணங்கள் நம்பத் தக்கனவாக இல்லை.

(ii) தங்களை நேரில் சந்திக்க எங்கள் இயக்கத்தவர்கள் முயன்றார்கள். இயலவில்லை. தாங்கள் ஊரிலும் இல்லை.

(iii) தலைமைப் பீடத்திலிருந்து பலமுறை தங்களுடைய முகவரிக்குப் பல அஞ்சல்கள் வரையப்பட்டன. இருந்தும், தங்களிடமிருந்து பதிலே இல்லை.

(iv) தங்களைப் பற்றி இந்து முன்னணி, RSS, குன்றக் குடி அடிகளாரின் மடத்தைச் சேர்ந்தவர்கள் ... என்ற பலரிடம் விசாரிக்கப்பட்ட போதும்; அவர்களிடமிருந்து முழுமையான செய்திகள் கிடைக்கவில்லை.

இவை போன்ற காரணங்களால்தான் ஒரு வேளை தாங்கள் இந்துமதத்தில் ஏற்கனவே உள்ள சந்தர்ப்பவாதிகள், மதத் துரோக விரோதச் சத்திகள், மதப் போலிகள், கூலிகள், புல்லுருவிகள் ... போன்ற ஏதேனும் ஒரு வகையினரோ என்று சந்தேகிக்க நேர்ந்தது. இப்படிச் சந்தேகிப்பது இந்துமத விடுதலைக்காக அருட்படை திரட்டி மீண்டும் ஒரு பாரதப் போரே நிகழ்த்திடத் தயாராகிக் கொண்டிருக்கும் கண்ணதேவனை எங்களது குருதேவருக்கும், அவரது திருக்கூட்டத்தாருக்கும் நீதியேயாகும், நியாயமேயாகும். நாங்கள் போர்க்கால நடவடிக்கைகளில் இருக்கின்றோம். இனியாவது எங்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

(3) இந்துமத விடுதலையின் முதல் கட்டமாகத்தான் தமிழின விடுதலைப் போரும், தமிழ்மொழி விடுதலைப் போரும் துவக்கப் பட்டிருக்கின்றன. அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியாகவும், இம்மண்ணுலகின் மூத்த மொழியாகவும் இருக்கின்ற தமிழ்மொழியின் மூலம் இந்துமத வரலாறு, இந்துமதப் பெரியார்களின் வரலாறு, இந்துமத அருளூற்றுக்களான கோயில் ஆலயங்களின் வழிபாடு, பத்தி சத்தி சித்தி முத்தி இவைகளை வழங்கக் கூடிய அருளூறு பூசைமொழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளின் தொகுப்புக்களை அச்சிட்டு வழங்கும் பணி துவக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் உங்கள் பங்கு என்ன? இனி உங்கள் பணி என்ன? விவரமாகப் பதிலெழுதுங்கள்.

அன்பு

**சி.கவிக்குமார்,**

**தலைமைப் பொறுப்பாளர்.**

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# அருள் வாசகம்

# ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக் கவிதை

புத்தாண்டு ஆங்கிலேயருடையது; அவணியெல்லாம் விழாவாகிறது!
எத்திசையோரும் ஏற்றுப் போற்றுவது போலவே போற்றுகிறோம்!
இத்திருநிலை தமிழ்ப் புத்தாண்டு பெற்றிடவே ஏற்போம் உறுதி!
நினைத்தவர் வதைத்துத் துவைத்து அழித்திடத் தமிழினம்
இத்தரணியெலாம் கூலியாய், ஏமாளியாய், வேலியிலாப் பயிராய்
இனத்துரோகி, விரோதி கங்காணிகளால் வாழ்வதைத் தடுப்போம்!
தன்னலப் போலிக் கூலித் தலைவர்களே தமிழின வீழ்ச்சி, தாழ்ச்சி
என்றுணர்ந்தே கருவறை ஊழியரான பூசாறி, பட்டர், குருக்கள்
என்போரனைவரும் திரட்டி; அருட்போரால் இருளகற்ற, ஒளியேற்றப்
புத்தாண்டில் உறுதி பூண்போம்! ஒத்துழைப்பீர்! ஏந்து நல்குவீர்!

**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**இராசிவட்ட நிறைவுடையார், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**“இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**

**- குருபாரம்பரிய வாசகம்.**





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

அருளாளர்கள் விரும்பினால்; தங்கள் மீது முழுமையான நம்பிக்கையும், தாங்கள் எதிர்பார்க்கும் முழுமையான பக்குவமும் பெற்றவர்கள் எவரானாலும் சரி, அவருக்கு எத்தகைய அருட்சத்தியையும், சித்தியையும், முத்தியையும் வழங்கலாம்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org
https://gurudevar.in https://gurudevar.org
https://induism.org Email: indhuism@gmail.com